# இறைத்தூதன்

## கத்தோலிக்க வார இதழ்


“மண்ணுலகில் நீங்கள் தடை செய்பவை அனைத்தும் விண்ணுலகிலும் தடை செய்யப்படும்; மண்ணுலகில் நீங்கள் அனுமதிப்பவை அனைத்தும் விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும் என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். உங்களுள் இருவர் மண்ணுலகில் தாங்கள் வேண்டும் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தை அதை அவர்களுக்கு அருள்வார்.” (மத் 18:10-20)




## சுதந்திர & மலேசிய தினம் 2023
## மலேசிய கிறிஸ்தவக் கூட்டமைப்பின் ஊடக அறிக்கை

ஆகஸ்டு 31-ம் திகதி சுதந்திர தினத்தின் 66-ம் ஆண்டு நிறைவையும் செப்டம்பர் 16-ம் திகதி மலேசிய தினத்தின் 60-ம் ஆண்டு விழாவையும் **‘மேன்மைமிகு மலேசியா, உறுதியான ஒற்றுமை, நிறைவான நம்பிக்கை** என்ற கருப்பொருளுடன் மலேசியர்கள் ஒன்றிணைந்து கொண்டாட ஆவலாக இருக்கிறார்கள். மலேசிய கிறிஸ்தவக் கூட்டமைப்பானது சரவாக், சபா மற்றும் தீபகற்ப மலேசியா வாழ் கிறிஸ்தவ சமூகத்தைப் பிரதிப்பலிக்கிறது. இந்த அமைப்பு நம் அன்பான நாட்டின் மீது எப்போதும் எல்லா வல்லமையுள்ள ஆண்டவருடைய ஆசீர்வாதங்கள் நிலைக்கத் தொடர்ந்து இறைவேண்டல் செய்கிறது.

நம் நாட்டின் வரலாற்றில், மிக முக்கியமான இவ்விழாவைக் கொண்டாடும்போது, நம் எண்ணங்கள் பின்னோக்கி நகர்ந்து, செழிப்பான எதிர்காலத்தை நோக்கிப்பார்க்கும் ஓர் இளம் நாட்டினரின **‘மெர்டேக்கா’** எனும் மகிழ்ச்சியின் அறைகூவல் நம் காதிலும் கேட்கிறது. ஆனாலும், இன்று நம் நாட்டின் தேசிய ஒருமைப்பாடு ஒரு பலவீனமான நிலையில் காணப்படுகிறது என்றால் மிகையாகாது. 2022-ம் ஆண்டு பொதுத்தேர்தலிலும், அதைத் தொடர்ந்து இப்போது நடந்து முடிந்த மாநிலத் தேர்தல்களிலும் இனம் மற்றும் சமயம் தொடர்பான பல தொடர்ச்சியான பிரிவினைக் குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. வாக்குகளும் அவ்வாறே போடப்பட்டிருப்பதைக் காட்டுகிறது.

நீண்ட காலமாக நாம் பாதுகாத்து வரும் நமது அரசியலமைப்புச் சட்டத்தை தத்தம் இன மற்றும் சமயக் கொள்கைகளுக்கு ஏற்ப மறுவிளக்கம் கொடுக்க முயலும் குரல்கள் ஓங்கி ஒலித்து மலேசிய நாட்டின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கிறது.

மலேசியக் கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மைப் போலவே ஒருமித்த எண்ணம் கொண்டவர்களாகிய இதர மலேசியர்களுடன் இணைந்து பிரிவினைவாதக் குரல்களை அடக்கி, நாம் நேசிக்கும் நாட்டை ஒரு வலுவான, ஒற்றுமையான நாடாக ஆக்க வேண்டும். நம் அரசியல் அமைப்புச் சட்டம் நாட்டின் ஒவ்வொரு குடிமக்களுக்கும் பாதுகாப்பு தரும்படி நிலைநாட்டப்பட வேண்டும். நம் மக்களாட்சி அடிப்படையில் ஒவ்வொரு குடிமகனும் சுதந்திரத்துடனும், கண்ணியமான, அர்த்தமுள்ள வாழ்க்கையை அமைதியுடனும், நல்லிணக்கத்துடனும், செழுமையுடனும் வாழ வழிவகுக்கிறது.

அரசியலமைப்பு சட்டத்தோடு, தேசியக் கோட்பாட்டின் மூலம் ஓர் ஒன்றுபட்ட மலேசியாவை உருவாக்க அரசு கருதி மலேசியர்களுக்கிடையே ஒற்றுமை விதைகளை விதைத்து, மக்களிடையே ஒரு பிணைப்பை ஏற்படுத்த வழிவகுக்கும் என்று எண்ணியது.

நம் தேசியக் கோட்பாடு நமது 4-வது மன்னர் YDPA துவாங்கு இஸ்மாயில் நசிருதின் ஷா அவர்களல் 1970-ம் ஆண்டு, ஆகஸ்டு 31-ம் திகதி அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. மே 13, 1969-ல் நடைபெற்ற இனப்பூசல்கள் மலேசியாவின் நல்லிணக்கம், அமைதி மற்றும் செழுமைக்கு ஒரு சவாலாக அமைந்தபோது, தேசிய ஒற்றுமையைக் கட்டிக்காக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் நம் அரசு தலைவர்கள் வடிவமைத்ததுதான் தேசிய கோட்பாடுகள் ஆகும். பல இன, சமய. கலாச்சாரங்கள் கொண்ட மலேசிய மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் அரணாக இக்கோட்பாடுகள் விளங்கும் என்பது அவர்களின் நம்பிக்கையாக அமைந்தது.

இம்மாதக் கொண்டாட்டத்தின் மத்தியில் கூட, நம் தேசியக் கோட்பாட்டின் உயர்ந்த உன்னத நோக்கங்களையும் 5 முக்கிய கோட்பாடுகளையும் நினைவுகூர்தல் சிறப்பு.

தேசியக் கோட்பாடுகளின் நோக்கங்கள் எல்லாச் சமூகத்தினரிடையேயும் முழுமையான ஒற்றுமையை உருவாக்குவது, மக்களாட்சி நடைமுறையைப் பாதுகாப்பது, நாட்டின் செழிப்பை நியாயமான மற்றும் சமமான கூட்டு முறையில் அனுபவிக்கக் கூடிய சமுதாயத்தை உருவாக்குவது, வளமான பல தரப்பட்ட பாரம்பரியங்களைத் தாராளத்துடன் அணுகுவதற்கு உத்தரவாதம் அளிப்பது, உயர் கல்வியையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தும் முற்போக்கான சமுதாயத்தை உருவாக்குவதாகும்.

தேசிய கோட்பாட்டின் 5 கொள்கைகள்:

1. இறைவன் மீது நம்பிக்கை வைப்போம்.
2. பேரரசருக்கும் நாட்டிற்கும் விசுவாசம் செலுத்துவோம்.
3. அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைபிடிப்போம்.
4. சட்ட முறைப்படியான ஆட்சி நடத்துவோம்.
5. நன்னடத்தை ஒழுக்கத்தைப் பேணுவோம்.

அரசியல் அமைப்புச் சட்டம் மற்றும் தேசியக் கோட்பாட்டின் அடிப்படையில் தேசிய ஒற்றுமையை மேம்படுத்தவும் எல்லா இனங்களையும் அரவணைத்து சமூகங்களுக்கிடையே ஒற்றுமையைப் வளப்படுத்தவும் முன்னுதாரணமாக நடந்துகொள்ளும் நல்ல சமூகத் தலைவர்கள் தேவை. இந்த தலைவர்கள் ஒற்றுமையின் பொருளையும் ஒற்றுமையே பலம் என்பதையும், அதன் மூலமாகவே நாடு அமைதி, நல்லிணக்கம், வளர்ச்சியடைய முடியும் என்பதை அனுதினமும் உணர்த்திட வேண்டும். ஒன்றுபட்ட மலேசியா நிலைத்து நிற்க நமது அரசு தலைவர்களும் மற்றும் சமூக, சமந்தப்பட்ட தலைவர்களும், நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் வாழும் அனைத்துத் தரப்பினரின் நல்வாழ்வில் அக்கறை காட்டுவது இன்றியமையாதது. எந்தவொரு பிரிவினரும் பின்தங்கிவிடக் கூடாது.

செய்ய வேண்டியது அதிகம் என்பதாலும், நேரம் குறைவாக இருப்பதாலும் நம் அரசு தலைவர்கள் ஒன்றணைந்து மலேசியர்களின் நலவாழ்விற்கு செயல்பட முன்வர வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம். இதற்குத் தொடக்கமாக அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்களுக்கிடையே ஒற்றுமை விதைகளை விதைக்க தேசிய கோட்பாட்டு மன்றங்களை உருவாக்கலாம். நம் ஆசிரியர்கள் இவர்களுக்கிடையே ஒற்றுமையின் சின்னங்களாகத் திகழ்வார்களாக.

நமது மன்னர் மற்றும் ஆட்சியாளர்கள் அடிக்கடி அரசியல் தலைவர்களுக்குக் கூறிவரும் நல்லாலோசனைகளைக் கருத்தில் கொண்டு, ஏழைகள், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களின் அன்றாடத் தேவைகளைச் சந்திப்பதிலும், நல்ல வருமானத்துடன் கூடிய வேலைகளை உருவாக்கி, அவர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் நல்ல எதிர்காலத்தை நிர்ணயிப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

இக்காலக் கட்டத்தில் நமக்குத் தேவையானவர்கள் நாட்டைக் கட்டியெழுப்புகிறவர்கள் தாம் இன, சமயப் பிரிவினைப் பேச்சால் மக்களைப் பிளவுப்படுத்தும் சுயநலத் தலைவர்கள் அல்ல. துங்கு அப்துல் ரஹ்மான், துன் டாக்டர் இஸ்மாயில், அப்துல் ரசாக் போன்ற நல்ல தலைவர்கள் நாம் நேசிக்கும் இந்நாட்டை சமய வெறி, சமூகப் பிளவுகள், ஒற்றுமையின்மை போன்ற குழியில் தள்ளிவிடாமல் இன்னும் மேன்மை நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டுமென இறைவனை வேண்டுகிறோம்.

நமது மாமன்னர், ஆட்சியாளர்கள், ஆளுநர்கள், பிரதமர், அமைச்சரவை உறுப்பினர்கள், முதல் அமைச்சர்கள், மாநில செயற்குழு உறுப்பனர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் இவர்களுக்கு ஞானம், மனோபலம், நல்வாழ்வு ஆகியவற்றை அபரிதமாக வழங்கிட மலேசியர்களாகிய நாம் தொடர்ந்து எல்லாம் வல்ல இறைவனிடம் இறைஞ்சி மன்றாடுவோம். இவர்கள் எப்போதும் அனைத்து மலேசியக் குடிமக்களின் நலனுக்காக முழுமனதுடனும், முழு திடத்துடனும் இடைவிடா முயற்சியுடன் சேவையில் ஈடுபட வேண்டும்.

**ஒற்றுமையே பலம்**


*Cor Episcopa Philip Thomas (Chairman)*

*Archbishop Dr. Simon Poh Hoon Sen Vice-chairman*

*Bishop Datuk Danald Jude Vice-chairman*

*Revd.Dr. Eu Hong Seng Vice-chairman*


## மினவுதல் மாதா பங்கில் உடலின் இறையியல் பயிலரங்கம்

சிரம்பான்: கடந்த 6.8.2023 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, இங்குள்ள மினவுதல் அன்னை பங்கில் ‘உடலின் இறையியல்’ எனும் தலைப்பில் பயிலரங்கம் ஒன்று



நடத்தப்பட்டது . காலை 9 முதல் மாலை 6 மணிவரை நடைபெற்ற இப்பயிலரங்கத்தில்

*தொடர்ச்சி, அடுத்துப் பக்கம்*

# மினவுதல் மாதா பங்கில் உடலின் இறையியல் பயிலரங்கம்

## (முதல் பக்கத் தொடர்ச்சி)

ஆண் பெண் என்ற பாலியலை கொடையாக இறைவன் ஒவ்வொருவருக்கும் கொடுத்துள்ளார். இதன் அடிப்படையில் இறையழைத்தலின் குரலைக் கேட்டு, 'Vocare' அதன் முக்கியத்துவத்தையும் அறிந்து வாழ்வது எப்படி என்பதும் அன்று தெளிவுப்படுத்தப்பட்டது. ஒவ்வொருவரின் வாழ்விலும் இறையழைத்தல் தினமும் நடக்கிறது. எடுத்துக்காட்டாக, மற்றவர் சரியான முறையில் கையாளவும் கற்பை பாதுகாத்துக் கொள்வதன் அவசியமும் வலியுறுத்தப்படடது. 'நம் உடல் நமது உரிமையல்ல. மாறாக, அது தூய ஆவியின் ஆலயமாகும்'. எனவே, இளமைப் பருவத்தில் பல சவால்களைக் கடந்து வரும் போது, கற்போடு வாழ்தலில் மட்டுமே நாம் உண்மை மகிழ்ச்சியை அனுபவிக்க இயலும் என்பதும், இவ்வாறு




களை கடவுளின் படைப்பாக மதித்து மரியாதை கொடுப்பது, இறைவேண்டல் மீது ஈடுபாடாக இருப்பது, இறையச்சம் கொள்வது, இறைவார்த்தையைப் பறை சாற்றுவது போன்றவை குறிப்பிடத்தக்கவை.

அனைவரும் தூய்மை வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளதால் அனைவருக்கும் அத்தகுதி இருப்பதை உணர்ந்து, தூயத் தன்மையை எளிமையில் அன்றாட வாழ்க்கையில் கடைபிடித்து வாழுதல் அவசியம் என்பது எடுத்தியம்பப்பட்டது.

இன்றைய இளைஞர்கள் டேட்டிங் (Dating) என்ற வார்த்தையின் உண்மையான அர்த்தத்தை உணர வேண்டும். அதன் நோக்கமே பொறுப்புணர்ச்சி உடைய திருமணத் தயாரிப்பு ஆகும். அதை தூய்மையாகவும் கற்புடனும் இருப்பதின் மூலம் நாமும் 'புனிதர்கள்' ஆக முடியும் என்பதும் ஆழமாக எடுத்துரைக்கப்பட்டது.

நிறைவாக, ஆண்களும் பெண்களும் பிரிவுகளாக பிரிந்து பாலியல், கற்புடைமை தொடர்பான பல கேள்வி பதில் வழியாக எங்களுடைய பயிற்சி நடத்துனரோடு பகிர்ந்து கொண்டார்கள். அதே வேளையில் அருட்சகோதரி ரீத்தா சவரியண்ணன் அவர்கள் பெற்றோர்களுடனும் உடலின் இறையியலைப் பற்றி ஒரு கலந்துரையாடல் நிகழ்வை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

*(கார்மலின் இலக்கியா, அன்ன டயேரினா கிறிஸ்தி)*

# கத்தோலிக்கத் திருஅவை அனைவருக்குமானது!

## திருத்தந்தை நினைவுறுத்து

**வத்திக்கான்:** ஆன்மிக முறையிலும், மேய்ப்புப்பணி முறையிலும் மக்களுடன் இணைந்து செல்வதற்கு அதிக உணர்திறன் மற்றும் படைப்பாற்றல் தேவை என்றும், அனைத்து நிலையில் உள்ள மக்களும் திருஅவையில் வாழ அழைக்கப்படுகிறார்கள் என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஓரினச்சேர்க்கையாளர்கள், திருநங்கைகள் என அனைவருக்கும் திருஅவையில் இடம் உள்ளது என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயேசு சபை அருள்பணியாளர்களுடன் திருத்தந்தை நடத்திய உரையாடல், La Civiltà Cattolica என்னும் இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

தலைமுறை சவால்கள், சான்றுள்ள சமய வாழ்வு பாலியல் புகார்கள், கோட்பாட்டின் வளர்ச்சி, போர்கள், என பல்வேறு கருத்துக்களில் அவர்களுடன் உரையாடிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், போரினால் உலகம் முழுவதும் நடந்துகொண்டிருக்கும் அழிவுகள் எத்தகையன என்பதை நாம் கண்ணால் காண்கின்றோம் என்றும் எடுத்துரைத்துள்ளார்.

மாற்றம் அவசியம் எனக் கருதுபவர்கள் முன்னோக்கிச் செல்பவர்கள், திருஅவையின் கோட்பாடுகளை தவறாக எண்ணுபவர்கள் பின்னோக்கிச் செல்பவர்கள் என்றும், இவ்வாறு பின்னோக்கிச் செல்பவர்கள் திருஅவையின் அடிப்படை மற்றும் மீட்பிற்கான ஆற்றலை இழந்துவிடுகின்றார்கள் என்றும் எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அருள்பணியாளர்கள் தங்களது பிரச்சனைகளை மூடி மறைக்காது அதனை

> **'திருஅவை என்பது அனைவருக்குமானது, எந்த மொழி, கலாச்சாரம், மக்கள் அல்லது நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அனைவரையும் அரவணைத்துக்கொள்ளும்'**

உரியவர்களிடம் தெரிவித்து அதற்கானத் தீர்வினைக் காண முயலவேண்டும் என்றும், அவ்வாறு செய்யாவிடில் அது அவரது தவறே அன்றி, அவர்கள் சார்ந்திருக்கும் சபையையும் சமூகத்தையும் சார்ந்ததல்ல என்று எடுத்துரைத்துள்ளார்.

ஆயர் மாமன்றத்தயாரிப்பிற்கானச் செயல்பாடுகள் பற்றி எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தூய ஆவியின் வழி



நடத்துதலால் அது சிறப்பாக நடைபெறும் என்று தான் நம்புவதாகவும் கூறியுள்ளார்.

தலத்திருஅவைகளுக்கு இடையிலான பதட்டங்கள் பற்றி எடுத்துரைத்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பிற்போக்கு அணுகுமுறைகளினால், இரண்டாவது வத்திக்கான் சங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து அதனை கேள்விக்கு உட்படுத்துபவர்களாலேயே இந்நிலை தலத் திருஅவைகளில் ஏற்படுகின்றது என்றும் கூறியுள்ளார்

போர் ஆயுதங்கள் மற்றும் மரண தண்டனை ஆகியவற்றை பாவம் என்று வரையறுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மாற்றம் மிக அவசியம் என்றும், திருஅவையில் எதிர்ப்புக்கள் பல இருக்கின்ற போதிலும், அனைவரையும் வரவேற்கும் வகையில் அது எப்போதும் திறந்த கதவுகளைக் கொண்டிருக்கின்றது என்றும் கூறியுள்ளார்.

மேலும், துன்புறும் தலத்திருஅவை, திருநங்கைகள், ஓரினச் சேர்க்கையாளர்கள் ஆகியோர் பற்றியும் அவர்களுடன் கலந்துரையாடியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

*மெரினா ராஜ் – வத்திக்கான்*

**மற்றவர்களை ஒரு தடையாகப் பார்க்காமல் அன்புக்குரிய சகோதர சகோதரிகளாகப் பார்த்து பகைவர்கள் இல்லா உலகை உருவாக்குவோம்.**

# உறவுக்குத் துணைபோவோம்

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 23 -ம் ஞாயிறுவில் இணைந்துள்ளோம். இறைவாக்கினர் எசேக்கியேல் நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகம் ஒரு பாவியின் மனமாற்றத்திற்காக நாம் என்ன செய்யவேண்டும் என்பதை நமக்கு எடுத்துரைக்கிறது. நம்மைச் சுற்றியுள்ள தீயோரைக் கண்டிக்காதபோது தீயோரோடு சேர்ந்து நாமும் அழிவோம். அதே நேரத்தில் தீயோரை நாம் கண்டிக்க அவர்கள் மனம் திரும்பினால் அவர்களோடு நாமும் மீட்கப் பெறுவோம் என்று கடவுள் இறைவாக்கினர் எசேக்கியேல் வழியாக அறிவுறுத்துகிறார்.

நமது அன்றாட வாழ்வில், தவறு செய்யும் ஒருவரை கண்டிக்க நினைக்கும்போது, அவர் அதற்குச் செவிமடுக்காமல், நமக்கெதிராக செயல்பட்டால், 'எப்படியாவது கெட்டுப்போகட்டும், நாம் என்ன செய்வது?' என்று ஒதுங்கிச் செல்கிறோம். இது ஒருவிதத்தில் அடுத்தவர் மட்டில் நம்முடைய அக்கறையின்மையைக் காட்டுகிறது. நாம் ஒவ்வொருவரும் அடுத்தவருக்கு காவலாளிகள் என்ற உணர்வோடு வாழ வேண்டியவர்கள் என்பதை மறந்துவிடுகிறோம்.

புனித பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் நாம் ஒவ்வொருவரும் அடுத்தவர்மீது நிபந்தனை இல்லாத, தன்னலமற்ற அன்பைக் காட்டவேண்டும். அதுதான் நாம் ஒருவர் மற்றவருக்கு செலுத்தக்கூடிய கடனாக இருக்கவேண்டும் என்று வலியிறுத்துகிறார்.

நற்செய்தியில், இறைமக்கள் மத்தியில் ஒருவர் குற்றம் புரிந்தால், அவரை எவ்வாறு கையாள வேண்டும் என்பதற்கான குறிப்பிட்ட வழிமுறைகளை இயேசு கொடுக்கிறார். குற்றம் புரிந்தவரை எடுத்த எடுப்பில் தீர்ப்பளித்தால் பகைதான் தொடரும். உறவு சீர்ப்படாது. எனவே, இயேசு பின்வருமாறு நான்கு வழிமுறைகளை முன்மொழிகிறர்.

முதலில், பாதிக்கப்பட்டவர் தவறு புரிந்த நபரிடம் தனிப்பட்ட முறையில் உறவைச் சீர்படுத்துவதற்காக முயற்சிக்க வேண்டும். இது சற்று கடினம்தான். ஆனால், முயற்சிக்க வேண்டும் அது பலனளிக்கவில்லை என்றால், நம்பிக்கைக்குரிய இரண்டு அல்லது மூன்று பேர் கொண்ட குழுவாகச் சென்று குற்றம் புரிந்தவரிடம் பேசிப் பார்க்க வேண்டும். இதனால் அவர் மனம் கரையக்கூடும். மூன்றாவதாக, தவறு செய்தவர் இன்னும் மனந்திரும்பவில்லை என்றால் திருஅவை தலைவர்களிடம் செல்ல வேண்டும் என்று இயேசு அறிவுறுத்துகிறார்.

நிறைவாக, திருஅவைக்கும் அவர் செவிசாய்க்காவிடில், திருந்தாவிடில் எந்த வழக்கு மன்றத்துக்கும் போக வேண்டியதில்லை. அந்த மனிதர் ஒரு புறவினத்தாரைப்போல சமூகத்தில் விடப்படுவார் என்று கூறப்படுகிறது.

நாம் அனைவரும் கிறிஸ்துவின் மறையுடலில் உறுப்புகளாக இருக்கிறோம். ஒவ்வொரு உறுப்பையும் இன்றியமையாததாக நாம் ஏற்க வேண்டும். எனவே, உறவை சரிசெய்வதில் தாமதம் கூடாது.

அதே சமயத்தில் சீர்கெட்ட உறவை சீர்செய்ய முற்படுவோருக்குச் செவிசாய்ப்பதும், மதித்து நடப்பதும் அவசியமாகும். அகந்தை அழிவுக்கு இட்டுச் செல்லும். இன்று நிறைவாக இயேசு மேலும் இரு வாக்குறுதிகளை நம்மோடு பகிர்கிறார். அவை: நம்மில் இருவர் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால் விண்ணுலகில் இருக்கும் நம் தந்தை அதை நமக்கு அருள்வார். இரண்டு மூன்று பேர் அவர் பெயரில் கூடியிருக்கும் இடத்தில் அவரது உடனிருப்பும் இருக்கும் என்பதை நினைவில் நிறுத்துவோம்.

*-ஆவி. டேவிட், குளுவாங்*

**ஆண்டின் பொதுக்காலம் 23ம்- ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | எசே 33: 7-9 |
| திபா | 95: 1-2. 6-7. 8-9 |
| 2-ம் வாசகம் | உரோ 13: 8-10 |
| நற்செய்தி | 18: 15-20 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**